**இலங்கை இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னொலஜி கம்பனி - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னொலஜி கம்பனியின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 36(அ) பந்தியின் பிரகாரம் இருப்பினை அளவிடும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் இருப்பைக் கணிப்பிடும் போது FIFO முறைமை பின்பற்றப்பட்ட போதும் அது தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அதனை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தேவையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 55 ஆம் பந்திக்கு முரணாக கம்பனியால் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்த மாதத்திற்குரிய பெறுமானத் தேய்வு செய்யாதிருப்பதற்கும் அகற்றப்படுகின்ற மாதத்திற்காக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்வதற்கும் பெறுமானத் தேய்வு கொள்கையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடுதல் அனுபவத்தினை அடிப்படையாகக் கொள்ளல் வெளிப்படையான விடயமாகும். அதன் பிரகாரம் நிறுவனத்தின் முகாமைத்துவத்தால் உரிய சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு கணிப்பிடும் போது ஏற்படக்கூடிய வசதியீனங்களை மாற்றியமைப்பதற்கு நியமத்திற்கு இணங்க உரிய பெறுமானத் தேய்வு கொள்கை தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு உட்பட்ட திகதியிலிருந்து பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 23 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங் களிலிருந்து கிடைத்து பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி நியாயமான பெறுமதியில் கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்த | கணக்கீட்டின் போது நியாயமான பெறுமதி என்ற தொகுதியில் சேவையிலுள்ள அல்லது சொத்தொன்றின் உடனடியான சந்தை விலை தொடர்பாக முரண்பாடுகள் மற்றும் பாகுபாடின்றி மதிப்பீடு செய்யப்படுகின்றது. இலத்திரனியல் உற்பத்திகள் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கிடைக்கப் பெறுகின்றவைகளும் நியாயமான பெறுமதியில் கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் அந்த சொத்துக்கள் ரூபா 43,595,732 ஆன சந்தை விலை பெறுமதியில் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அல்லது மீள்ஸ்தாபித்தல் மற்றும் தொடர்புடைய கிரயம், சந்தை நிலைமை மற்றும் வழங்கல், கேள்வி தொடர்பான விடயங்கள் என்பன நியாயமாக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் எமது நிறுவனத்தினாலும் உரிய சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடும் போது உரிய அடிப்படைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்குச் சொந்தமான சட்ட ரீதியாகக் கையளிக்கப்பட்ட காணியாக இல்லாமல் ரூபா 42,468,943 காணி அபிவிருத்தி கிரயமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. மேலும் வாடகை உடன்படிக்கையின் கீழ் அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 30,383,463 தொகை நடைமுறை வேலை – கட்டிட மீளமைத்தலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனிக்குச் சொந்தமாக காணியொன்று அல்லது கட்டிடமொன்று காணப்படாதிருந்தமை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் அலுவலக தளபாடப் பொருட்கள் (Office Furniture) கொள்வனவு செய்தல் மற்றும் அலுவலக கட்டிடத்தை திருத்துவதற்காக செலவிடப்பட்ட பெறுமதியாக இருந்ததுடன் அந்த செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்ததுடன் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை. உரிய மூலதன செலவினங்களை மூலதனமாக்குதல் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மையால் அந்த செலவிடப்பட்ட பெறுமதி நடைமுறை வேலையாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் வெளிப்படுத்தப்படாத விசேடமானவைகள் கணக்கீடு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயல் கைநூலில் 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவுடன் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தால் ஆண்டறிக்கையின் வரைவு ஒன்று நிதிக்கூற்று தொகுதிகளுடன் சமரப்பிக்கப்படவில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 இன் ஆண்டறிக்கைக்குரிய சிங்களம் மற்றும் Tamil பிரதிகள் மொழி பெயர்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையும் பூர்த்தி செய்யப்பட்டு மொழிபெயர்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பொழிப்பு அறிக்கை அவதானிப்புக்களுக்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 144,338,431 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 50,206,031 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 94,132,400 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளம் ரூபா 29,533,849 இனாலும், கட்டிட வாடகை ரூபா 47,334,400 இனாலும், ஆய்வுகூடம் ஸ்தாபிக்கும் செலவினம் ரூபா 4,675,772 இனாலும் மற்றும் சுகாதார சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான செலவினம் ரூபா 2,723,458 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உயிரியல் தொழில்நுட்ப பூங்காவை ஸ்தாபிப்பதற்காக ஹோமாகம பிட்டிபன ஆராம வத்தையில் 13.2 ஏக்கர் ரூபா 743 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 380 மில்லியன் தற்போது நிதி அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 363 மில்லியனைத் தீரத்து வைத்து உரிமையாண்மையைப் பெற்றுக்கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்வதற்கு பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான அரச திணைக்களத்தின் அங்கீகாரம் 2022.09.29 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் 2022.10.04 ஆந் திகதி கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் குறித்த அங்கீகாரத்தின் கீழ் உரிய செலவினங்கள் செய்யப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையால் இந்தக் காணியை கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | காணியின் உரித்துறுதியைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ரூபா 10,983,725 நுகர்வுப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அதில் 1.2 சதவீதமே பயன்படுத்தப்பட்டமை மிகவும் சிறிய அளவாக இருந்தமையின் காரணமாக ஆண்டில் தேவையற்ற பிரகாரம் இருப்புக்கள் சேகரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தற்போது நாட்டில் ஏற்படுகின்ற நிலைமையின் அடிப்படையில் காணப்பட்ட இறக்குமதி வரையறையின் காரணமாக சந்தையில் உரிய இரசாயனப் பொருட்கள் வரையறையாகக் காணப்பட்டதுடன் அதன் காரணமாக உரிய கொள்வனவுகளை விரைவாக மேற்கொண்டிருந்ததுடன் அதன் மூலம் தற்போதைய சந்தை பெறுமதியை விட கணிசமான விலை குறைவிற்குரிய பொருட்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை கிடைத்ததன் அடிப்படையில் நிறுவனத்திற்கு கணிசமான தொகையொன்றை சேமிப்பதற்கு முடியுமாக இருந்தது. | இருப்பு விடயங்களைக் கொள்வனவு செய்யும் போது இருப்பு மட்டம் தொடர்பாக கவனத்திற் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் இராஜகிரியவில் அமைந்துள்ள பசுமை விவசாய நிலையத்தில் 1500 சதுர அடி மேலும் அலுவலகம் ஒன்றுக்கு வாடகையுடன் நடாத்திச் செல்லப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபைக் கூட்டங்களை உள்ளடக்கிய வேறு கலந்துரையாடல்கள் 11 இற்காக மாத்திரம் இந்த கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடம் வேறு ஆக்க பூர்வமான பொருளாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் நிதியமைச்சிலிருந்து SLIBTEC நிறுவனத்திற்குக் கிடைத்த ரூபா 1,715,000 ஆன 49 அலுவலக உபகரணங்கள் மற்றும் ஒரு அச்சிடல் இயந்திரம் என்பன அலுவலகத்தில் காணப்பட்டதுடன் அவை குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் பதவியணியினரில் சிலர் தமது கடமைகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அநேகமான வியாபர கலந்துரையாடல்களும் இதில் நடைபெறுகின்றது. நிதியமைச்சில் இருந்து வழங்கப்பட்ட இராஜகிரிய கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் எமது நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படுவதுடன் அந் உபகரணங்கள் குறித்துரைத்த பிரகாரம் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக சரியான குறியிடல் முறைமையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதில் காணப்படுகின்ற நலிவுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய குறியிடல் முறைமை நிறுவனத்திற்காக சகல சொத்துக்களையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வினைத்திறனான செயற்பாடுகளுக்க ாக பயன்படுத்தாத சொத்துக்களை மீண்டும் உரிய தரப்பினருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயிரில் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக விரைவாக முதலீட்டார்கள் தமது செயல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சர்ந்தர்ப்பம் வழங்கும் எதிர்பார்ப்பில் உயிரில் தொழில்நுட்ப பூங்காவை ஸ்தாபிக்கும் முதலாவது கட்டம் 2020 திசெம்பர் வரையில் பூர்த்திசெய்ய்பபட வேண்டியிருந்த போதிலும் கம்பனி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட காலம் கடந்திருந்த போதிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே எந்தவொரு முதலீட்டாளருடனும் உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 மார்ச் 02 ஆம் திகதி நிதியமைச்சிலிருந்து காணியை கையளித்தல் பூர்த்தி செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மிகுதிப் பணம் (ரூபா 392 மில்லியன்) கோரப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 04 இல் மேலதிக நிதி ஏற்பாட்டிற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும் பாதீட்டு அளவு கோதியளவில் இல்லாமையின் காரணமாக மிகுதி செலுத்துதல்கள் கைவிடுவதற்கு அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அமைச்சரவை குறிப்பு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானத்திற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் காணி உரித்து விடுவிக்காமையின் காரணமாக முதலீட்டாளர்களுக்காக காணியை அளவிடல் மற்றும் கட்டிடங்களை நிர்மாணிக்கக்கூடிய பிரதேசங்களை இனங்காணல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | இலக்குகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சர்வதேச இன விருத்தி ஆய்வு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிலையம் (ICGEB- International canter for Genetic Engineering and Biotechnology) இல் இருந்து இன்சுலின் மற்றும் வளர்ச்சி ஹோமோன்களை உள்ளடக்கிய 10 உயிரியல் பொருட்கள் உள்நாட்டு உற்பத்தி தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த உயிரியல் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஏற்படுகின்ற செலவினத்தை குறைத்தல். கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமாக இருந்த போதிலும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான பின்புலம் இதுவரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பூங்காவின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 24,035,653.52 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ரூபா 17,975,600 தொகையும் மின்சார சபைக்கும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் காணிக்காக 2018 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 380 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகை ரூபா 392 மில்லியன் ஆகும். | நோக்கங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |